**தலைப்பு 307 – மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம்**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 307 - மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2023 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் விரிவான வருடாந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 யூன் 09 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சலை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கமைய இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்திரோயகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்கவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமையவும் தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) முன்னைய ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

**1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்**

**(அ) வருமான பெறுவனவு**

திணைக்களத்திற்குரிய வருமானங்களை கணக்கீடு செய்யும் போது கீழே காட்டப்பட்டுள்ள குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம் ஊடாக பொது மக்களுக்கு பெற்றுக் கொடுக்கப்படுகின்ற சேவைகளுக்காக ஒவ்வொரு வருமான குறியீட்டுக்களின் கீழ் நாளாந்தம் பெறப்பட வேண்டிய வருமானம் சரியாக சேர்க்கப்படுகின்றமை உறுதி செய்வதற்காக பெற்றுக் கொடுக்கப்படுகின்ற சேவைகள் பிரகாரம் வருமானம் மற்றும் பெறப்பட்ட வருமானம் ஒப்பிடுவதற்கு முறைமையொன்று தயாரிக்கப்பட்டிராமையினால் வழங்கப்படுகின்ற சேவைகள் தொடர்பாக அறவிடப்பட வேண்டிய வருமானம் முறையாக கணக்கிடப்பட்டுள்ளமை உறுதி செய்யப்படாது ரூபா 3,579,179,220 ஆன பெறப்பட்ட வருமானம் கணக்கிடப்பட்டிருந்தது. | மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தினுள் வருமானம் சேகரித்தலினை அறிக்கையிடல் மற்றும் கணக்கிடப்படல் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்காக மக்கள் வங்கியுடன் தொடர்புடைய “Bank link” கணினி நிகழ்ச்சித் திட்டம் செயற்படுத்தப்படுகின்றது. அதனூடாக திணைக்களத்தின் அனைத்து நாளாந்த வருமானங்களும் வைப்பிலிடல் வெவ்வேறு வருமான தலைப்புக்களின் பிரகாரம் நாளாந்த அறிக்கை, மக்கள் வங்கியிலிருந்து பெற்றுக் கொள்ளப்படுகின்ற நாளாந்த சேகரிப்பு அறிக்கையுடன் ஒப்பிட்டு சரியானது என உறுதி செய்யப்பட்ட பின்னர் சரியான வருமான தலைப்பின் கீழ் கணக்கிடப்படும். அதன் பிரகாரம் வருமானம் கணக்கிடப்பட்டமை சரியானதாகும். | திணைக்களம் வழங்கப்பட்ட சேவைகள் பிரகாரம் பெற வேணடிய வருமானம் மற்றும் பெறப்பட்ட வருமானம் நாளாந்தம் ஒப்பிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ii) | திணைக்களத்தின் மாவட்ட அலுவலகங்கள் ஊடாக வழங்கப்படுகின்ற சேவைகளுக்காக அறவிடப்படுகின்ற வருமானம் சிகாஸ் கணினி முறைமையின் ஊடாக திணைக்கள தலைப்பிற்கு செலவு வைக்கப்பட்டுள்ளதுடன் அவ்வாறு செலவு வைக்கப்பட்டுள்ள வருமானத்தினை உறுதி செய்வதற்கு மாவட்ட அலுவலகத்திடமிருந்து விரிவான வருமான அறிக்கையொன்று பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் மாவட்ட அலுவலகத்திடமிருந்து பெறப்பட்டுள்ள ரூபா 4,620,125,055 ஆன வருமானம் சரியாக உறுதி செய்யப்படாது இறுதி கணக்கு தயாரிக்கப்பட்டிருந்தது. | கணனிமயப்படுத்தப்பட்ட திரண்ட அரச கணக்கு முறைமை ஊடாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள பிரகாரம் மாவட்ட அலுவலக வருமானம், மாவட்ட அலுவலகத்தின் கணக்காளரின் மேற்பார்வையின் கீழ் கணக்கிடப்படுகின்றது. | மாவட்ட செயலகங்கள் ஊடாக சேகரிக்கப்பட்டுள்ள வருமானம் உறுதி செய்வதற்குரிய அட்டவணை மாதாந்தம் பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | மாவட்ட அலுவலகங்கள் ஊடாக திணைக்கள தலைப்பிற்கு வருமானத்தினை செலவு வைப்பதற்கு பயன்படுத்தப்பட்ட தலைப்புக்களை பயன்படுத்தி பல சந்தர்ப்பங்களில் வருமான தலைப்புக்கள் 2 இற்கு மொத்த பெறுமதி ரூபா 3,872,839 ஆன தொகை வரவு வைக்கப்பட்டு வருமானம் மீள பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த போதிலும் அவ் வரவு வைத்தல்களுக்கான காரணங்கள் மற்றும் அவ் வரவு வைத்தல்கள் திணைக்களத்திற்கு தொடர்பு பெறும் பிரகாரம் உறுதி செய்வதற்கு பயன்பாட்டு ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கணினிமயப்படுத்தப்பட்ட திரண்ட அரச கணக்கு முறைமையின் பிரகாரம் சில மாவட்ட செயலகங்கள் பிழைகளை சீர்செய்வதற்காக கணக்கிடப்பட்ட நாளேட்டு குறிப்புக்கள் ஊடாக மேற்படி பெறுமதிகள் உருவாகியுள்ளதுடன் அதற்குரிய ஆவணங்கள் மாவட்ட செயலகங்கள் ஊடாக பரீட்சிக்கப்படல் வேண்டும். | பிழைகளை சீர் செய்த நாளேட்டு குறிப்புகள் மற்றும் அதற்குரிய பயன்பாட்டு ஆவணங்கள் மாவட்ட அலுவலகங்களிலிருந்து பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (iv) | திணைக்கள கணக்கு புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பரீட்சிக்கும் போது, மீளாய்வாண்டிற்குரிய ஒவ்வொரு வருமான குறியீட்டுக்களின் கீழும் குறித்த திணைக்களத்தினால் சேகரித்தல்களில் ரூபா 317,468,630 மற்றும் குறித்த திணைக்களத்திற்குரிய வேறு அமைச்சு/ திணைக்களத்தினால் சேகரிக்கப்பட்ட வருமானங்களில் ரூபா 318,742,041 ஆன வேறுபாடுகள் நிதிக் கூற்றுக்கள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வருமானங்கள் இடையே அவதானிக்கப்பட்டது. | 1003.07.04 அரச கணக்கு திணைக்கள நாளேட்டு குறிப்பின் ஊடாக மேற்கொண்ட சீர் செய்தல் வேறு திணைக்கள வருமானமாக நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டமை ஊடாக இந்த வேறுபாடு நிகழ்ந்துள்ளது.<br><br>2003.02.14 திணைக்கள புத்தகங்கள் ஊடாக திணைக்கள சேகரிப்புக்கள் மற்றும் திணைக்கள புத்தகங்கள் பிரகாரம் வேறு திணைக்கள சேகரிப்புக்களின் பெறுமதி நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிகளுடன் இணங்குகின்றது எனவும் அரச கணக்கு திணைக்கள நாளேட்டு குறிப்பின் ஊடாக மேற்கொண்ட சீராக்கலொன்றின் தேறிய பெறுமதியான ரூபா 309,776,930 ஆன தொகை ஏனைய திணைக்கள வருமானங்களினுள் உள்ளடக்கப்படல் மட்டும் நிகழ்ந்துள்ளது.<br><br>2003.02.15 அரச கணக்கு திணைக்க நாளேட்டு குறிப்பு ஊடாக மேற்கொண்ட சீராக்கலொன்று ஏனைய திணைக்கள வருமானமாக நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருந்தமை ஊடாக இந்த மாற்றம் நிகழ்ந்துள்ளது. | திணைக்கள புத்தகங்கள் மற்றும் நிதிக் கூற்றுக்கள் இடையே வேறுபாடுகள் ஏற்படாத வண்ணம் கணக்கு அறிக்கைகள் பேணிச் செல்லப்படல் வேண்டும். |
| (v) | நி.பி (2) (ஈ) நி.பி 176(1) மற்றும் 01/2015 ஆம் இலக்க மற்றும் 2015 யூலை 20 திகதிய அரச நிதிச் சுற்றறிக்கை பிரகாரம் ஒவ்வொரு வருமான குறியீட்டின் கீழும் நிலுவை வருமானம் கணிக்கப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் 1003-07- | அரச நிதிச் சுற்றறிக்கை 2/2020 (8) ஆம் பிரிவின் பிரகாரம் நீக்கப்பட்ட வரி மற்றும் கட்டணங்களுக்குரிய நிலுவை வருமான அறிக்கைகள் சமர்ப்பித்தல் தேவையற்றதாகும். காபன் வரி 2019 திசெம்பர் 01 | வரியொன்று நீக்கப்படுமெனில் அவ் வரிக்குரியதாக பெறப்பட வேண்டிய நிலுவை வருமானம் காணப்படுமெனில் நிலுவை வருமான |

| | | | |
|---|---|---|---|
| | 09 ஆம் இலக்க வருமான குறியீட்டின் கீழ் கடந்த ஆண்டிற்காக நிலுவை வருமானம் கணக்கிடப்பட்டிருக்கவில்லை. எனினும் நடப்பு ஆண்டில் மேற்படி வருமான குறியீட்டின் கீழ் ரூபா 9,105,861 ஆன நிலுவை வருமானம் அறவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நடப்பு ஆண்டிலும் மேற்படி வருமான குறியீட்டின் கீழ் நிலுவை வருமானம் காணப்பட முடிவதினால் நிலுவை வருமானம் சரியாக கணிக்கப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது. | ஆந் திகதி தொடக்கம் அமுலுக்கு வரும் வகையில் நீக்கப்பட்டுள்ளது. | அறிக்கை பேணிச் செல்லப்படல் வேண்டும். |
| (vi) | மீளாய்வாண்டிற்காக நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள நிலுவை வருமானம் தொடர்பான கூற்றில் (ஏசீஏ – 1 (1)) குறிப்பிடப்பட்டுள்ள ஆண்டு இறுதி நிலுவை வருமானம் ரூபா 164,964,500 ஆக காணப்பட்ட போதிலும் நிலுவை வருமானம் தொடர்பாக தயாரிக்கப்பட்டுள்ள ஆவணங்கள் பிரகாரம் நிலுவை வருமானம் ரூபா 170,942,000 ஆகியமையினால் நிதிக் கூற்றினுள் நிலுவை வருமானம் ரூபா 5,977,500 குறைவாக குறிப்பிடப்பட்டிருந்தது. | 2/2020 அரச நிதிச் சுற்றறிக்கை பிரகாரம் தயாரிக்கப்பட்ட அரை ஆண்டு நிலுவை வருமான அறிக்கையின் அடிப்படையில் வருடாந்த நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள நிலுவை வருமான கணக்கு தயாரிக்கப்பட்டுள்ளது. | நிலுவை வருமானம் தொடர்பாக சரியான ஆவணங்கள் பேணிச் செல்லப்படல் வேண்டும். |
| (vii) | சொகுசு வரிக்குரிய வாகனமொன்று ஆரம்ப பதிவு மேற்கொள்ளப்பட்ட திகதி தொடக்கம் 7 ஆண்டுகள் கடக்கும் வரையில் வருடாந்தம் சொகுசு வரி செலுத்தப்படல் வேண்டும். அதன் பிரகாரம் சொகுசு வரிக்கு தொடர்புடைய வாகனங்களுக்காக வரும் 6 ஆண்டுகள் செல்லும் வரையில் சொகுசு வரிக்குரிய அறிக்கைகள் பேணிச் செல்லப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு சொகுசு வரிக்கு தொடர்புடைய வாகனங்கள் எண்ணிக்கை மற்றும் அவ் ஒவ்வொரு வாகனங்களுக்காக அறவிடப்பட்டுள்ள வரி மற்றும் தொடர்ந்தும் அறவிடப்படவுள்ள நிலுவை வரி உள்ளடங்கும் ஆவணங்கள் பேணிச் செல்லப்பட்டிராமையினால் நிதிக் கூற்றினுள் உள்ளடக்கப்பட்டுள்ள ரூபா 164,964,500 ஆன நிலுவை சொகுசு வரி வருமானத்தின் துல்லியம் உறுதி செய்யப்படவில்லை. | சொகுசு வரி அறவிடல் தொடர்பாக திணைக்களத்தினுள் சொகுசு கணினி அமைப்பொன்று செயற்படுத்தப்படுகின்றது. வரி அறவிடல்கள், எதிர்காலத்தில் செலுத்தப்பட வேண்டிய வரி மற்றும் வரி தொடர்பான தகவல்கள் தொடர்பான அறிக்கைகள் அக் கணினி அமைப்பு ஊடாக பேணிச் செல்லப்படுகின்றதுடன் அதனூடாக வருடாந்த நிலுவை வருமான அறிக்கையொன்று உருவாகின்றதுடன் அவ் அறிக்கையின் அடிப்படையில் நிதிக் கூற்றுக்களில் தகவல்கள் உள்ளடக்கப்படுகின்றது. | நிலுவை சொகுசு வரி வருமானத்திற்காக ஒவ்வொரு வாகனத்திலிருந்தும் அறவிடப்பட வேண்டிய வரி இனங்காணக் கூடிய வகையில் நிலுவை வருமான அறிக்கைகள் பேணிச் செல்லப்படல் வேண்டும். |

**(ஆ) மீண்டெழும் செலவினம்**

நிதிக்கூற்றுக்களுக்குரிய மீண்டெழும் செலவினங்களை கணக்கீடு செய்யும் போது கீழே காட்டப்பட்டுள்ள விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதி குத்தகை முறைக்கு கொள்வனவு செய்யப்பட்டுள்ள மூன்று மோட்டார் வாகனங்களுக்குரிய மீளாய்வாண்டிற்கான முதலீட்டு பெறுமதி ரூபா 561,637 குறைவாக குறிப்பிடப்பட்டிருந்ததுடன் குத்தகை வட்டி செலவீனம் ரூபா 76,017 அதிகமாக குறிப்பிடப்பட்டிருந்தது. | 2022 திசெம்பர் மாதம் தவணை செலுத்துவதற்கு நிதியேற்பாடு போதுமானதாக இல்லாமையினால் இந்த வேறுபாடு ஏற்பட்டுள்ளது. | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக குத்தகை சொத்துக்கள் தொடர்பாக கணக்கு வைக்கப்படல் வேண்டும். |

**(இ) மூலதனச் செலவினங்கள்**

நிதிக்கூற்றுக்களுக்குரிய மூலதனச் செலவினங்களை கணக்கீடு செய்யும் போது கீழே காட்டப்பட்டுள்ள விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீகஹ கிவுல கட்டிடங்கள் நீர்மாணிப்பு மற்றும் தொடுநிலை முறையின் ஊடாக பரீட்சைகள் நடாத்துதல் (307-2-1-10-2104) போன்ற செலவின விடயங்களுக்காக மதிப்பிடப்பட்ட நிதியேற்பாடு ரூபா 15,000,000 ஆக காணப்பட்ட போதிலும் அச் செலவின விடயத்தின் கீழ் ரூபா 15,225,737 ஆன செலவீனமொன்று ஏற்கப்பட்டிருந்தது. நிதியேற்பாட்டினை மிகைத்து ஏற்கப்பட்டுள்ளமையை நிதிக் கூற்றுன் ஊடாக வெளிப்படுத்தலை தவிர்த்துக் கொள்வதற்காக ரூபா 225,737 ஆன மிகைச் செலவீனம் அச் செலவின விடயத்திற்கு பணமாக மேற்கொள்ளப்பட்ட செலவீனமாக எதிர்மறை பெறுமதியொன்றினை உள்ளடக்கி கட்டிட நிர்மாணிப்புக்கள் (307-2-1-12-2104) செலவின விடயத்திற்கு சேர்க்கப்பட்டிருந்தது. | பதில் பெற்றுக் கொடுக்கப்படவில்லை. | நிதி பிரமாணம் 69 பிரகாரம் நிதியேற்பாட்டினை மிகைத்து செலவு செய்தல் தொடர்பாக அரச கணக்குகள் குழுவிற்கு அறிக்கையிடப்படல் வேண்டும். |

**(ஈ) வைப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களுக்குரிய வைப்புக் கொடுப்பனவு மற்றும் மீதிகளை கணக்கீடு செய்யும் போது கீழே காட்டப்பட்டுள்ள விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | மீள செலுத்தும் அடிப்படையில் நிறுத்தி வைக்கப்பட்ட நிறுத்தி வைத்தல்கள், ஒப்பந்தம் அல்லது எதிர்பார்க்கப்பட்ட பணி நிறைவடைந்த பின்னர் அந் நிறுத்தி வைத்தல்கள் விடுவித்துக் கொள்ளுமாறு வைப்புச் செய்த நிறுவனம்/ நபர்களுக்கு தெரிவிக்கப்பட வேண்டியதுடன் அவ்வாறு பல தடவைகள் தெரிவித்து அனுப்பப்பட்ட பின்னர் | இந்த நிறுத்தி வைக்கப்பட்ட தொகை இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட நீண்ட காலம் வைப்பு கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளமையினால், அத் தொகை வைப்புச் செய்வதற்குரிய தகவல்கள் தேடியறிவதற்கு முடியாதமையினாலும், நிறுத்தி வைத்தல்கள் தொடர்பாக ஒப்பந்த | நி.பி 571 பிரகாரம் நிறுத்தி வைக்கப்பட்ட வைப்புக்கள் தொடர்பாக உரிமை கோருவதற்கு எவரும் முன் |

| | | | |
|---|---|---|---|
| | உரிமை கோருவதற்கு எவரும் முன்வராத போது மட்டும் 2 ஆண்டுகள் கடந்த பின்னர் நி.பி 571 பிரகாரம் அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்படல் வேண்டும். எனினும் வைப்பு உரிமையாளர்களுக்கு அவ்வாறான முறையான அறிப்பு மேற்கொள்ளாது 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 3 வைப்பு கணக்குகளுக்குரிய மொத்த பெறுமதி ரூபா 14,816,930 ஆன வைப்பு அரச வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டு பணம் செலுத்துகின்றமையினால் அரசிற்கு நட்டமொன்று ஏற்படக் கூடுமென்பதனாலும், அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டது. எவ்வாறெனினும் இந்த தொகை மீண்டும் கோரம் போது வருமானத்திலிருந்து மீள செலுத்தப்பட முடிகின்றது. | வராதமை உறுதி செய்துக் கொள்ளப்பட்ட பின்னர் அரச வருமானத்திற்கு சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ii) | மாவட்ட அலுவலகங்களில் பேணிச் செல்லப்படுகின்ற 3 வைப்பு கணக்குகளுக்குரிய ரூபா 7,764,236 ஆன வைப்பு மீதியொன்று ஒதுக்கீட்டு கணக்கில் உள்ளடக்கியுள்ள போதிலும் அதற்குரிய கால பகுப்பாய்வு உடைய தனி மீதி பட்டியலொன்று கணக்காய்விற்கு முன்வைக்கப்படாமையின் காரணத்தினால் அவ் வைப்பு மீதிகளின் துல்லியம் மற்றும் நிதி பிரமாணம் 571 உடன் இணங்குவதை பரிசோதிக்க முடியவில்லை. | மாவட்ட அலுவலகங்கள் ஊடாக 03 திணைக்கள வைப்பு கணக்குகளில் வரவு செலவு வைத்தல்கள் மேற்கொள்ளப்படுகின்றமை திறைச்சேரி அச்சு குறிப்பு மீதிகள் இணங்காமை ஊடாக தேடியறியப்பட்டதுடன் அதன் பிரகாரம் அவ் இணங்காத மீதிகள் பரிசோதிப்பதற்கு திறைச்சேரியிடமிருந்து வரவு செலவு மீதி பட்டியலொன்று பெற்றுக் கொள்ளப்பட்டு பரீட்சிக்கும் போது மாவட்ட அலுவலகங்கள் ஊடாக உறுதி செய்யப்பட்டது. அதன் பிரகாரம் 2022.11.30 ஆந் திகதி தொடக்கம் வைப்பு கணக்கிற்கு எந்தவொரு வரவு செலவு வைத்தல்களும் மேற்கொள்ள வேண்டாமென்று தெரிவித்து அனுப்பப்பட்டது. அதன் பிரகாரம் 19 மாவட்ட செயலகங்கள் தற்போது எங்கள் ஆலோசனை பிரகாரம் வரவு செலவு வைத்தலினை நிறுத்தியுள்ளது. எனினும் தொடர்ச்சியாக ஹம்பந்தோட்டை, கேகாலை, இரத்தினபுரி, கம்பஹா மற்றும் கிளிநொச்சி அலுவலகங்கள் வரவு செலவு வைத்தல்களை மேற்கொள்கின்றதுடன் அதை நிறுத்துவதற்கு பொது திறைச்சேரிக்கு மற்றும் மாவட்ட செயலாளருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.<br><br>மேலும் தமது அலுவலகங்களுக்குரிய இணக்க கூற்றுக்களை முன்வைக்குமாறு அனைத்து மாவட்ட செயலகங்களுக்கும் தெரிவித்து அனுப்பப்பட்டுள்ளதுடன் அவ் அறிக்கைகள் பெறப்பட்ட பின்னர் தங்களுக்கு தகவல்களை சமரப்பிக்கின்றேன். | மாவட்ட செயலகங்கள் ஊடாக வைப்பு கணக்கிற்கு மேற்கொள்ளப்படு கின்ற கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விரிவான தகவல்கள் உள்ளடக்கப்பட்ட பட்டியலொன்று பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | கணக்கு ஆண்டினுள் ஏனைய தலைப்புக்களிலிருந்து வைப்பு கணக்கிற்கு ரூபா 3,450,137 வைப்பு செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 2,521,957 ஆன வைப்பு ஆண்டினுள் தீர்க்கப்பட்டிருந்தது. எனினும் அவ் வைப்புக்களின் செலவு வைத்தல்கள் மற்றும் வைப்புக்களின் விடுவிப்புக்கள் எவ்வாறு என்பது உறுதி செய்துக் கொள்வதற்கு எந்தவொரு பதிவேடும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லலை. | | ஏனைய தலைப்புக்களிலிருந்து வைப்பு கணக்கிற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள வரவு வைத்தல்கள் மற்றும் செலவு வைத்தல்கள் உறுதி செய்யக்கூடிய விரிவான ஆவணங்கள் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## (உ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றை கணக்கீடு செய்யும் போது கீழே காட்டப்பட்டுள்ள விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | மூலதன சொத்துக்கள் சுவீகரித்துக் கொள்வதற்கு பயன்படுத்தப்படாத, ஓட்டுனர் உரிமம் பத்திரம் அச்சிடுவதற்கான நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டுள்ள செலவின விடயம் 307-02-01-0-2509 இன் கீழ் ரூபா 918,000 பெறுமதியான கணினி உதிரிப்பாகங்கள் மற்றும் 6,511,960 பெறுமதியான 96 UPS பெட்டரிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அச் சொத்துக்கள் கணினி உதிரிப் பாகங்கள் என கணக்கிடப்பட்டிராமையினால் நிதி அல்லாச் சொத்துக்கள் ரூபா 7,429,960 குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது. | கணினி உதிரிப் பாகங்கள் மற்றும் UPS முறைமைக்காக 96 பட்டரிகள் கொள்வனவு செய்யதலானது மூலதன சொத்துக்கள் சுவீகரிக்கப்படலாகாததுடன் அது மூலதன சொத்துக்களை மேம்படுத்தலாகும். அதன் பிரகாரம் அவை மூலதன சொத்துக்களாக குறிப்பிடப்படவில்லை. | நிதிச் சொத்துக்களை சுவீகரித்துக் கொள்வதற்கு நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டுள்ள செலவின விடயங்களிலிருந்து மட்டும் நிதி அல்லாச் சொத்துக்கள் கொள்வனவு செய்யப்படல் வேண்டும். |
| (ii) | மீகஹ கிவுல கட்டடங்கள் நிர்மாணிப்பு மற்றும் தொடுநிலை முறைமையின் கீழ் பரீட்சைகளை நடாத்துதல் என்ற செலவின விடயம் (307-2-1-10-2104) ஊடாக ஏனைய 8 திணைக்களங்கள் மற்றும் அமைச்சுக்களின் தலைப்புக்கள் கீழ் நடப்பு ஆண்டினுள் ரூபா 15,225,737 ஆன மூலதன செலவீனம் ஏற்கப்பட்டு மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்கள பிரடீதச அலுவலகங்களுக்கு மூலதன சொத்துக்கள் சவீகரித்து கொள்ளப்பட்டிருந்த போதிலும் அச் சொத்துக்கள் நிதி அல்லாச் சொத்துக்களினுள் உள்ளடக்கப்பட்ராமையினால் நிதி அல்லாச் சொத்துக்கள் அப் பெறுமானத்தினால் குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது. | 307-2-1-10-2104 ஆம் செலவின விடயத்தின் ஊடாக மாவட்ட அலுவலகங்களுக்கு நிதியேற்பாடு வழங்கப்பட்டு அம் மாவட்ட அலுவலகங்கள் ஊடாக சொத்துக்கள் சுவீகரிக்கப்பட்டு செலவினங்களை ஏற்றலும் அக் குறித்த மாவட்ட அலுவலகங்கள் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றதுடன் அதற்காக எங்கள் திணைக்களத்திலிருந்து சொத்துக்கள் கணக்கு வைத்தலொன்று மேற்கொள்ளப்பட முடியாது. | மூலதன செலவினம் உள்ளடக்கப்படும் செலவின விடயத்திலேயே நிதி அல்லாச் சொத்துக்கள் கணக்கிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**(ஊ) முற்பணக் கணக்கு மீதிகள்**

முற்பணக் கணக்குகளில் ஆண்டின் இறுதியிலான மீதிகளை கணக்கீடு செய்யும் போது கீழே காட்டப்பட்டுள்ள விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | சிகாஸ் முறைமையின் ஊடாக பெற்றுக் கொள்ளப்பட்ட திரண்ட பரீட்சை மீதியின் பிரகாரம் அரச உத்தியோகத்தர்களின் முற்பண பீ கணக்கிற்கு குறுக்கு குறிப்பினூடாக மேற்கொண்ட செலவு வைத்தல் ரூபா 21,668,415 மற்றும் வரவு வைத்தல் ரூபா 20,731,448 ஆக காணப்பட்ட போதிலும் சான்றுப்படுத்தி கணக்காய்விற்கு சமர்ப்பித்த அரச உத்தியோகத்தர்களின் முற்பண பீ கணக்கினுள் மொத்த செலவு வைத்தல்கள் ரூபா 13,271,184 மற்றும் வரவு வைத்தல்கள் ரூபா 20,392,339 என உள்ளடக்கப்பட்டிருந்தது. வேறுப்பாட்டிற்கு காரணங்களான திணைக்கள தலைப்புக்களுக்கு உரியதாகாத வரவு வைத்தல்கள் மற்றும் செலவு வைத்தல்கள் பட்டியலொன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்காமையினால் சான்றுதிப்படுத்தப்பட்ட முற்பண பீ கணக்கின் துல்லியம் உறுதி செய்யப்படவில்லை. | பரீட்சை மீதி உள்ளடக்கப்பட்ட அனைத்து கொடுக்கல் வாங்கல்களும் திணைக்களத்திற்குரிய கொடுக்கல் வாங்கல்கள் அற்றதுடன் முற்பண பீ கணக்கிற்கு உள்ளடக்கப்பட்டவை தலைப்பு 307 தலைப்பிற்குரிய கொடுக்கல் வாங்கல்கள் மட்டுமாகும். இறுதி நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அரச கணக்குகள் சுற்றறிக்கைகள் தொடர்பாக தங்கள் கவனத்தினை கொண்டு வருகின்றேன்.<br><br>அதன் பிரகாரம் முற்பண பீ கணக்கிற்குரிய பெறுமானங்கள் சரியானவை என தொடர்ந்தும் தெரிவித்துக் கொள்கின்றேன். | இறுதி நிதிக் கூற்றுக்கள் தயாரிப்பதற்கு தலைப்பினால் தொடர்புப்படுத்திக் கொள்ளும் முற்பண கொடுக்கல் வாங்கல்கள் உள்ளடக்கப்பட்ட அட்டவணைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (ii) | உத்தியோகத்தர் மரணித்து 05 ஆண்டுகளுக்கு மேல் கடந்திருந்த ரூபா 342,200 ஆன கடன் மீதி உத்தரவாததார்களிடமிருந்து அல்லது கிளைவழி மரபினர்களிடமிருந்து அறவிடப்பட்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மரணித்த உத்தியோகத்தர்களின் 2022.12.31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 549,459 மீதியில் ரூபா 207,259 தற்போது தீர்க்கப்பட்டுள்ளதுடன் தீர்ப்பதற்குள்ள மீதி ரூபா 342,200 ஆகும். | உத்தரவாததார்களிட மிருந்து அல்லது கிளைவழி மரபினர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (iii) | ஓய்வூதியம் இடைநிறுத்தப்பட்ட 02 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 154,547 ஆன கடன் மீதி 05 ஆண்டுகளுக்கு மேற்பட்டதுடன் 3-4 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட ரூபா 176,565 ஆன கடன் மீதியும் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | ஓய்வூதியம் இடைநிறுத்தப்பட்ட உத்தியோகத்தர்களின் கடன் மீதி 154,547 மற்றும் 176,565 தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | கடன் பட்டோரிடமிருந்து அல்லது உத்தரவாததார்களிட மிருந்து அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (iv) | பணி நிறுத்தம் செய்யப்பட்ட 15 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 1,389,843 ஆன கடன் மீதி அக் கடன் பட்டோரிடமிருந்து அல்லது உத்தரவாததார்களிடமிருந்து 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடப்படுவதற்கு தவறப்பட்டிருந்தது. 05 ஆண்டுகளை மிகைத்த மொத்தம் ரூபா 1,140,463 ஆன 12 கடன் மீதிகளும் அதனுள் காணப்படுகின்றது. | பணி நிறுத்தம் செய்யப்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 1,389,843 ஆன கடன் மீதி தீர்ப்பதற்காக விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | கடன் பட்டோரிடமிருந்து அல்லது உத்தரவாததார்களிட மிருந்து அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் |

| | | | |
|---|---|---|---|
| | | | வேண்டும். |
| (v) | இறுதி தவணை அறவிடப்பட்டு 05 ஆண்டுகளுக்கு மேற்பட்டிருந்த சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தரொருவரிடமிருந்து ரூபா 171,638 ஆன கடன் மீதியும், 3-4 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்திற்குரிய ரூபா 48,654 ஆன கடன் மீதியும், அறவிடப்படுவதற்கு தவறியிருந்தது. | சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தர்களின் ரூபா 220,292 ஆன தொகையானது விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டு தீர்க்கப்பட்டு வருகின்றது. | கடன் பட்டோரிடமிருந்து அல்லது உத்தரவாததார்களிட மிருந்து அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**(எ) கட்டுநிதி மீதிகள்**

கட்டுநிதி மீதிகளை கணக்கீடு செய்யும் போது கீழே காட்டப்பட்டுள்ள விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றினுள் உள்ளடக்கப்பட்ட ஏ.சீ.ஏ.1 மாதிரியினுள் (எஸ்.ஏ.21 பிரகாரம்) ஏனைய திணைக்களங்கள்/ அமைச்சுக்களினால் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 4,410,501,640 என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் கட்டுநிதி இணக்க கூற்றினுள் (ஏ.சீ.ஏ.7 மாதிரி) ஏனைய நிறுவனங்களிலிருந்து அறிக்கையிடும் நிறுவனத்திற்காக சேகரிக்கப்பட்டுள்ள வருமானமாக ரூபா 4,532,783,778 ஆன தொகை உள்ளடக்கப்பட்டிருந்தமையினால் நிதி கூற்று மாதிரிகள் இரண்டும் இடையே வருமானங்கள் தொடர்பில் ரூபா 122,282,138 ஆன வித்தியோசமொன்று அவதானிக்கப்பட்டது. | திறைச்சேரி செயற்பாடுகள் திணைக்களத்தின் தலைப்பின் கீழ் கணக்கிடப்பட்ட சொகுசு வரி வருமானம் திணைக்கள சேகரிப்பாக கணக்கிடப்படல் மற்றும் அரச சணக்குகள் திணைக்களம் நாளேட்டு குறிப்புக்கள் ஊடாக மேற்கொண்ட சீராக்கல்கள் ஏனைய திணைக்கள வருமானமாக கணக்கிடப்படல் ஊடாக இந்த வேறுபாடு நிகழ்ந்துள்ளது. | நிதிக் கூற்று மாதிரியினுள் வேறுபாடொன்று ஏற்படாத வண்ணம் வருமானம் தொடர்பான தரவுகள் உள்ளடக்கப்படல் வேண்டும். |

**(ஏ) காசப் பாய்ச்சல் கூற்று**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முதலீட்டு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் மூன்று மோட்டார் வாகனங்கள் குத்தகையின் கீழ் சுவீகரித்துக் கொண்டமைக்காக மீளாய்வாண்டின் போது மீள செலுத்தப்பட்ட கடன் தொகை ரூபா 6,561,537 ஆக காணப்பட்ட போதிலும் காசுப் பாய்ச்சல் கூற்றில் அது ரூபா 5,999,900 என காண்பிக்கப்பட்டிருந்தமையினால் முதலீட்டு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் ரூபா 561,637 இனால் அதிகமாக காண்பிக்கப்பட்டிருந்தது. | குத்தகை தவணை குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தமையின் காரணத்தினால் முதலீட்டு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் சரியானதல்ல என ஏற்றுக் கொள்கின்றேன். | சரியான பெறுமானங்களுடனான காசு பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

### 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடன்பாடுகளுக்கு உட்படல்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 4 மீண்டெழும் செலவின விடயங்களுக்காக மிகை நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தமையினால் நிதியேற்பாடு பயன்படுத்தப்பட்ட பின்னர் ரூபா 3,897,316 ஆன நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. செலவின விடயங்கள் பிரகாரம் மேற்படி நிதியேற்பாடு சேமிப்பானது 12 சதவீதம் தொடக்கம் 38 வரையான வீச்சினை கொண்டிருந்தது. | தேசிய பாதீட்டு சுற்றறிக்கை 03/2022 இன் பிரகாரம் அரச செலவீனம் கட்டுப்பாட்டினுள் 12% -33% வரையில் செலவின விடயங்கள் சேமிக்கப்பட்டிருந்தது. | சரியான கணிப்புடன் மதிப்பீடுகளை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ii) | மூலதன செலவின விடயங்களுக்காக சரியான கணிப்புடன் இன்றி நிதியேற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்தமையினால் மூலதன செலவின விடயங்களுக்குரிய நிதியேற்பாடு பயன்படுத்தப்பட்ட பின்னர் ரூபா 463,234,733 ஆன நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. செலவின விடயங்களின் பிரகாரம் அந் நிதியேற்பாடு சேமிப்புக்கள் 11 சதவீதம் தொடக்கம் 91 சதவீதம் வரையான வீச்சினை கொண்டிருந்தது. | தேசிய பாதீட்டு சுற்றறிக்கை 03/2022 இன் பிரகாரம் மூலதன செலவீனம் கட்டுப்பாட்டினுள் 11% - 91% வரையில் சேமிக்கப்பட்டிருந்தது. | சரியான கணிப்புடன் மதிப்பீடுகளை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (iii) | மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தில் காணப்படுகின்ற தரவு தளத்திலுள்ள குறைப்பாடுகளை அகற்றி மோசடிகளை தவிர்த்து தரவு தளத்தினை வலுப்படுத்தும் நோக்கில் நடப்பு ஆண்டில் ரூபா 20,000,000 ஆன நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அந் நிதியேற்பாட்டில் எந்தவொரு தொகையும் பயன்படுத்தப்பட்டிராததுடன் ஈ மொனிடரின் செயற்திட்டம் செயற்படுத்துவதற்கான எந்தவொரு சாதகமான நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 E-Motoring செயற்திட்டம் செயற்படுத்தாமையினால் இந்த நிதியேற்பாடு முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது. | E-Motoring செயற்திட்டம் விரைவில் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (iv) | ஒப்பந்த குத்தகை தவணையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக மூலதன பெறுமதியாக ரூபா 7,194,749 ஆன தொகை செலுத்தப்பட வேண்டி காணப்படுகையில் பாதீடு தயாரிக்கும் போது 2018 மூலதன சொத்துக்கள் சுவீகரித்துக் கொள்ளுதல் செலவின் விடயத்திற்காக ரூபா 6,000,000 மதிப்பிடப்பட்டிருந்தமையின் காரணத்தினால் உரிய கவனத்துடன் பாதீடு தயாரிக்கப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது. | போதுமான நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டடிராமையை ஏற்றுக் கொள்கின்றேன். | சரியான கணிப்புடன் மதிப்பீடுகளை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | திறைச்சேரி ஒட்டுமொத்த கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான அறிக்கையில் (SA 92) ரூபா 804,745,378 ஆன கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் நிதி பிரமாணம் 94 (2) மற்றும் 3 பிரகாரம் நிதிக் கூற்றினுள் உள்ளடக்கப்பட்டுள்ள கடப்பாடுகள் தொடர்பான கூற்றினுள் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் பெறுமானமாக ரூபா 527,253,074 ஆன தொகை உள்ளடக்கப்படல் காரணத்தினால் நிதிக் கூற்றினுள் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் ரூபா 277,492,304 இனால் குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது. | திறைச்சேரி ஒட்டுமொத்த கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களினுள் ரூபா 277,492,304 ஆன தொகை மேலதிகமாக உள்ளடக்கப்பட்டுள்ளது. நிதிக் கூற்றினுள் உள்ளடக்கப்பட்டுள்ள கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் ரூபா 527,253,304 ஆன தொகை சரியான பெறுமானம் ஆகும். | கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களின் சரியான பெறுமதிகள் SA 92 மாதிரியில் உள்ளடக்கபடல் வேண்டும். |
| (ii) | முன் கணக்கு ஆண்டு இறுதி திகதியில் உள்ளவாறு கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களாக நிதிக் கூற்றுக்களினுள் உள்ளடக்கப்பட்டிராத கடந்த ஆண்டிற்குரிய ரூபா 6,295,777 ஆன செலவினம் மீளாய்வாண்டினுள் செலுத்தி தீர்க்கப்பட்டிருந்தது. | வழங்கல் மற்றும் சேவைகள் மட்டும் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களாக நிதிக் கூற்றினுள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் வழங்கல் மற்றும் சேவைகள் அற்ற மேலதிக நேர கொடுப்பனவு, போக்குவரத்து செலவினம் போன்ற கடந்த ஆண்டின் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் மீளாய்வாண்டில் செலுத்தப்பட்டுள்ளது. | ஆண்டிற்குரிய அனைத்து கடப்பாடுகளும் பொறுப்புக்களும் இனங்காணப்பட்டு நிதிக் கூற்றினுள் உள்ளடக்கப்படல் வேண்டும். |
| (iii) | 2017 ஏப்ரல் 27 திகதிய அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 255/2017 02 (ஆ) ஆம் பந்தியின் பிரகாரம் வரும் ஆண்டினுள் செலுத்துவதற்குள்ள கடப்பாடுகள் ஒதுக்கீட்டு கணக்கில் 03 ஆம் குறிப்பினுள் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும், 2022 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு பின்னர் நிதி குத்தகை தவணைகள் 17 இற்கான ரூபா 12,756,239 கடப்பாடாக நிதிக் கூற்றினுள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | தவறுதலாக நிதி குத்தகை ஒப்பந்தம் கடப்பாடாக உள்ளடக்கப்பட்டிராததுடன் வரும் ஆண்டில் அக் கடப்பாட்டினை உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஒப்பந்த குத்தகை தொடர்பான தகவல்கள் கடப்பாடுகளாக நிதிக் கூற்றினுள் உள்ளடக்கப்படல் வேண்டும். |
| (iv) | நிதி குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்ட 03 வாகனங்களுக்கு மீளாய்வாண்டில் திசெம்பர் மாதத்திற்கு செலுத்தப்படாதுள்ள ரூபா 750,367 ஆன தவணை ஆண்டு இறுதி திகதியில் பொறுப்புக்கள் கூற்றினுள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | தவறுதலாக 2022 திசெம்பர் மாதம் நிதி குத்தகை தவணை பொறுப்பில் உள்ளடக்கப்படவில்லை. | ஆண்டிற்குரியதாக செலுத்தப்பட வேண்டிய குத்தகை தவணை பொறுப்பாக இனங்காணப்படல் வேண்டும். |

**2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| | **அவதானிப்புக்கள்** | | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|---|
| | **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு** | **இணங்காமை** | | |
| (i) | 2007 யூலை 9 திகதிய 2007 இன் 24 ஆம் இலக்க கணினிவழிக் குற்றச் சட்டத்தின் 5 ஆம் பிரிவு மற்றும் 6 (1) அ, ஆ, இ பந்திகள் | கணினிக்கு ஏதும் பணியினை நிறைவேற்ற வைப்பதற்கு தமக்கு அதிகாரமில்லையென தெரிவித்து, தன்னிச்சையாக கணினிக்கு அல்லது கணினி முறைமைக்கு அதிகாரமளிக்கப்படாத திரிபுபடுத்துதலை அல்லது சேதத்தினை ஏற்படுத்துவதற்கும், அது தேசிய பாதுகாப்பிற்கு, தேசிய பொருளாதாரத்திற்கு சேதத்தினை விளைவிக்கும் ஆளெவரும் குற்றவாளியாவார் என குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் திணைக்கள கணினி முறைமையை மாற்றியமைத்து தொடர்ச்சியாக மோசடி தன்மையான செயற்பாடுகள் நிகழ்கின்றமை வெளிப்படுத்தப்பட்டிருப்பினும், அம் மோசடிகளை தவிர்த்துக் கொள்வதற்கு உள்ளக கட்டுப்பாட்டு முறையினை வலுப்படுத்துவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | திணைக்கள கணினி முறைமை 2004 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்ட மென்பொருள் மற்றும் வன்பொருள் ஐ கொண்டு செயற்படுத்தப்பட்டு வருகின்றது. E-Motoring செயற்திட்டம் செயற்படுத்துவதற்கு முன்மொழியப்பட்டுள்ளமையினால் திணைக்கள கணினி முறைமை நாளதுவரையாக்கப்படவில்லை.<br><br>கணினி அமைப்பின் பாதுகாப்பு தொடர்பாக இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப முகவர் நிறுவனத்துடன் இணைக்கப்பட்ட இலங்கை கணினி அவசர தயார்நிலை அணி (SL CERT) ஊடாக கணினி பாதுகாப்பு தொடர்பாக கணக்காய்வொன்று மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், அதன் பெறுபேறுகளின் அடிப்படையில் முறைமை பாதுகாப்பு தொடர்பான மேல் நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் கணினி தரவு தளத்திடன் தொடர்புடைய நடவடிக்கைகளின் (அனமதியற்ற நுழைவு மற்றும் தரவுகள் மாற்றியமைத்தல் போன்ற செயற்பாடுகள்) மேற்பார்வைக்காக Privilege Access Management முறைமையொன்று தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதனூடாக அனுமதியற்ற நுழைவு மற்றும் சிறப்புரிமை பெற்ற கணக்குகள் ஒழுங்குப்படுத்தல் இதனூடாக மேற்கொள்ளப்படுகின்றது. | கணினி தொடர்பான மோசடிகளை தவிர்த்துக் கொள்வதற்கு உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை வலுப்படுத்தல் வேண்டும். |
| (ii) | நி.பி 342 (5) | காலாவதியான ரசீதுகள் மற்றும் கையேடுகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய முறை குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் வேரஹெர பிரதான | பயன்படுத்தி முடிந்த கையேடுகள் கைதவிர்ப்பு செய்வதற்கு ஆனையாளர் நாயகத்தின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கும் அறிக்கை தற்போது | நிதி பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | காசாளர் ஆலவலகத்தில் பயன்படுத்தப்பட்ட பொது 172 ரசீது புத்தகங்கள் ஏராளமாக முறையற்ற வண்ணம் குவிந்து கிடந்தன. | தயாரிக்கப்பட்டுள்ளதுடன் தொடர்ந்தும் பரீட்சித்து பார்த்து அதை விரைவில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வேண்டும். |
| (iii) | நி.பி 104(3) | விபத்து நிகழ்ந்த திகதி தொடக்கம் 07 நாட்களுக்குள் விபத்து தொடர்பாக ஆரம்ப அறிக்கையொன்று சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் 2022 ஆம் ஆண்டில் நிகழ்ந்த 04 விபத்துக்களில் 02 விபத்துக்களுக்காக கணக்காய்வு திகதியான 2023.05.19 ஆந் திகதி வரையிலும் வழங்கப்பட்டிருக்கவில்லை. | ஆவணங்கள் உரிய வண்ணம் பேணிச் செல்லப்பட்டிராமையினால் இந்த நிலை உருவாகியுள்ளமை அவதானிக்கப்படுகின்றது. மீண்டும் இவ்வாறான நிலை ஏற்படாது பார்த்துக்கொள்ளப்படும். | -மேற்படி- |
| (iv) | அரச பெறுகை வழிக்காட்டி கோவையின் 2.14.1 மற்றும் 3.5.1 ஆம் பந்திகள் | 2021 ஆம் ஆண்டிற்காக வேரஹெர அலுவலக சூழலில் தாபிக்கப்பட்டுள்ள இராணுவ தகவல் தொழிநுட்ப தீர்வு மத்திய நிலையத்தில் பயன்படுத்தபடுகின்ற 276 தனிப்பட்ட கணினிகள் சேவைகள் மற்றும் பராமரிப்பிற்காக ரூபா 4,478,300 பெறுமதியான கொள்வனவிற்காக பெறுகை வழிக்காட்டி கோவைக்கு முரணாக சிறிய பெறுகை குழுவொன்றினால் நேரடி ஒப்பந்த முறையின் கீழ் தனிப்பட்ட நிறுவனமொன்றிற்கு பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. | இந்த பெறுகை திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படவில்லை என தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | அரச பெறுகை வழிக்காட்டி பிரகாரம் கொள்வனவு செய்யப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 ஏனைய அவதானிப்புக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | KE - XXXX ஆம் பதிவு இலக்கத்தின் கீழ் முன் பதிவு செய்யப்பட்டுள்ள CEYGRA வகையைச் சேர்ந்த மோட்டார் வாகனமொன்றின் தரவுகளை பிறழாக மாற்றி MITSUBISHI PAJERO வகையைச் சேர்ந்த மோட்டார் வாகனமொன்றின் தரவுகளை உள்ளடக்கி 2019 ஆம் ஆண்டில் மோட்டார் வாகன பதிவு சான்றிதழொன்று மோசடியாக வழங்கப்பட்டமையின் காரணத்தினால் தண்டனை தொகையும் உள்ளடங்கலாக ரூபா 757,500 ஆன சொகுசு வரி வருமானமொன்று மற்றும் 35,200,000 உற்பத்தி வரி வருமானமொன்று இழக்கப்பட்டிருந்தது. | இவ்வாறான நட்டங்கள் மற்றும் சேதங்கள் அறிக்கையிடப்பட்டிராததுடன், நட்டம் மற்றும் சேதமாக உறுதி செய்யப்பட்ட பின்னர் அறிக்கையிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.<br><br>நட்டங்கள் மற்றும் சேதங்கள் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டு பேணிச் செல்லப்பட்டுள்ளதென தெரிவித்துக் கொள்கின்றேன். | கணக்காய்வு அவதானிப்புடன் நிகழ்நிலையில் முறையான விசாரணை நடத்தி இழந்த வருமானத்தினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மோட்டார் வாகனங்கள் பதிவு செய்யும் தரவு தளத்தின் பிரகாரம் KE–XXXX ஆம் இலக்கத்தின் கீழ் CRYGRA வகையைச் சேர்ந்த மோட்டார் வாகனமொன்று பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும் 2018 ஆம் ஆண்டில் அத் தரவுகள் மாற்றப்பட்டு MINICOOPER வகையைச் சேர்ந்த மோட்டார் வாகனமொன்றின் தரவுகள் உள்ளடக்கப்பட்டு மோட்டார் வாக பதிவுச் சான்றிதழொன்று வழங்கப்பட்டிருந்தமையினால் ரூபா 5,513,000 ஆன உற்பத்தி வரி வருமானம் மற்றும் ரூபா 44,050 ஆன புதிய பதிவு கட்டமொன்று இழக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (இ) | மோட்டார் வாகனங்கள் பதிவு செய்யும் தரவு தளத்தின் பிரகாரம் KE – XXXX ஆம் பதிவு இலக்கத்தின் கீழ் CEYGRA வகையைச் சேர்ந்த 580Kg பாரமுடைய பெட்ரோல் மோட்டார் வாகனமொன்று பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும் 2018 ஆம் ஆண்டில் அத் தரவுகள் மாற்றப்பட்டு TOYOTA வகையைச் சேர்ந்த 2580Kg பாரமுள்ள டீசல் மோட்டார் வாகனமொன்றின் தரவுகள் உள்ளடக்கப்பட்டு பதிவுச் சான்றிதழ் வழங்கப்பட்டமையின் காரணத்தினால் ரூபா 49,920,000 ஆன உற்பத்தி வரி வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஈ) | மோட்டார் வாகனங்கள் பதிவு செய்யும் தரவு தளத்தில் முன் பதிவு அடிசட்டக இலக்கம் மற்றும் இயந்திர இலக்கம் மாற்றப்பட்டு சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட சைக்கிள்களின் அடிசட்டக இலக்கம் மற்றும் இயந்திர இலக்கம் உள்ளடக்கப்பட்டு பதிவுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ள 91 சைக்கிள்களின் எஞ்சின் கொள்ளளவுகளை கருத்திற் கொள்ளும் போது செல்லுப்படியாகும் சுங்க குறிப்புடன் இறக்குமதி செய்யப்படாமையின் காரணத்தினால் ரூபா 55,207,475 ஆன சுங்க வருமானம் அரசிற்கு இழக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | -மேற்படி- | -மேற்படி- |
| (உ) | இலங்கைகள்கு சட்ட வரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட எனினும் பதிவு செய்யப்படாத சைக்கிள்கள் பதிவிற்கு சமர்ப்பிக்கப்பட்ட அமப/16/1307/709/061 மற்றும் 2016 யூலை 05 திகதிய அமைச்சரவை பத்திரிக்கை மற்றும் 2016 செப்தெம்பர் 07 ஆந் திகதி அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் குறித்த மிகை கட்டணம் அறவிடப்படாது மோசடி தன்மையாக பழைய இலக்கத்தின் கீழ் பதிவுச் சான்றிதழ் வழங்கப்பட்டமையின் காரணத்தினால் 91 வாகனங்களுக்குரிய ரூபா 21,285,000 ஆன மிகைக் கட்டணம் மற்றும் ரூபா 191,000 ஆன புதிய பதிவுக் கட்டணம் அறவிடப்படும் சந்தர்ப்பம் இழக்கப்பட்டமையினால் ரூபா 21,476,000 ஆன அரசிற்கு கிடைக்கப்பட வேண்டிய வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |

## 3.2 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மோட்டார் வாகன சட்டத்தின் பிரகாரம், மோட்டார் வாகனமொன்றினை மாற்றியமைக்கும் போது அடிசட்டகத்தினை தவிரத்து ஏனைய உதிரிப் பாகங்கள் மாற்றப்பட முடிந்த போதிலும் பெட்ரல் வாகனமொன்று டீசல் வாகனமொன்றாக மாற்றும் போது அடிசட்டக இலக்கமும் மாற்றப்பட்டிருந்த 27 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் மோட்டார் வாகனமொன்று மாற்றியமைக்கும் போர்வையில் சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட 27 வாகனங்கள் பதிவு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | இது தொடர்பாக உள்ளக பரிசோதனையொன்று நடத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | விரைவில் உள்ளக பரிசோதனையொன்று மேற்கொண்டு தாபன விதிக் கோவையின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | பெட்ரோல் மோட்டார் வாகனமொன்று டீசல் வாகனமொன்றாக மாற்றப்படும் போது பழைய மோட்டார் வாகனம் பதிவு இலக்கம் அமைப்பிலிருந்து அகற்றப்பட வேண்டிய போதிலும் 130 சந்தர்ப்பங்களின் போது மாற்றப்பட்ட வாகனங்களின் பதிவு இலக்கங்கள் அமைப்பிலிருந்து அகற்றப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | மாற்றப்பட்ட வாகனங்களின் பதிவு இலக்கங்கள் அமைப்பிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | இயந்திர இலக்கம் மற்றும் அடிசட்டக இலக்கம் ஆகிய இரண்டும் ஒரே இலக்கமாக கணினி அமைப்பிற்கு தரவுகள் உள்ளடக்கப்பட்டு முன்பதாக பதிவு செய்யப்பட்டிருந்த 03 வாகனங்கள் மாற்றியமைக்கப்பட்டு அடிசட்டக இலக்கம் மாற்றப்பட்டு ஏனைய சட்ட விரோதமான 3 வாகனங்கள் பதிவு செய்யப்பட்டிருந்து. | -மேற்படி- | விரைவில் உள்ளக பரிசோதனையொன்று மேற்கொண்டு தாபன விதிக் கோவையின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | BDA-XXXX ஆம் இலக்க பதிவு இலக்கத்தினை உடைய சைக்கிளின் உரிமையாளருக்கு தெரியாமல் திருடப்பட்ட ஆவணங்களை பயன்படுத்தி வேறு இரு நபர்களுக்கு சாட்டப்பட்டிருந்தது. அச் சாட்டுதல் தொடர்பான முறையான பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (உ) | வேரஹெர அலுவலகத்தில் 18 கன்டெனர் பெட்டிகளில் வாகன பதிவுகளின் ஆரம்ப கோப்புக்கள் மற்றும் சாட்டுதல் கோப்புக்கள் களஞ்சியப்படுத்தியிருந்ததுடன் அக் கன்டேனர் மழையிலிருந்து பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராமையின் காரணத்தினால் கன்டெனரினுள் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த கோப்புக்கள் அழிந்திருந்தன. | முறையான அலமாரி அமைப்புக்கள் இல்லாமையினால் அதிக அளவிலான கோப்புக்கள் களஞ்சியப்படுத்தி வைப்பதற்கு போதுமான | வேரஹெர அலுவலகத்தில் 18 கன்டெனர் பெட்டிகளில் காணப்படுகின்ற வாகன பதிவுகளின் ஆரம்ப கோப்புக்கள் மற்றும் சாட்டுதல் |

| | | | |
|---|---|---|---|
| | | கொள்கலன்களில் கோப்புக்கள் நேர்த்தியாக வைக்க முடியாமையினால் நீதிமன்ற மற்றும் ஏனைய அலுவலக நடவடிக்கைகளுக்காக தேவைப்படுகின்ற வாகன கோப்புக்கள் கண்டுபிடிப்பதில் சிரமம் ஏற்பட்டுள்ளது. அதன் பிரகாரம் தற்போது வாகன கோப்புக்கள் வைக்கப்பட்டுள்ள இந்த 03 கொள்கலன்களிலும் உள்ள கோப்புக்கள் மற்றும் ஆவணங்கள் அழிக்கப்படுகின்றன. சில கொள்கலன்களினுள் மழை நீர் கசிகின்றமையினால் அவை பழுதடைந்து வருவதனால் கொள்கலன்கள் புதிதாக்கப்பட்டு அதனுள் அலமாரிகள் பொருத்தும் பணிகள் தற்போது நடந்து வருகின்றது. | கோப்புக்கள் பாதுகாப்பதற்கு முறைமையொன்று தயாரித்தல் வேண்டும். |
| (ஊ) | வேரஹெர களஞ்சியத்திற்கு கையளிக்கப்பட்டுள்ள ஆரம்ப கோப்புக்கள் மற்றும் சாட்டுதல் கோப்புக்கள் இலகுவாக மீண்டும் பெற்றுக் கொள்ளக் கூடிய வகையில் களஞ்சியப்படுத்தப்படாது களஞ்சியத்தின் நடைப்பாதையில் குவிக்கப்பட்டிருந்தது. | வேரஹெர களஞ்சியத்தின் நடைப்பாதயில் குவிக்கப்பட்டுள்ள கோப்புக்கள் தற்காலிகமாக கட்டிடமொன்றில் தற்போது அடுக்கப்பட்டு வருவதுடன் மேலும் அச் செயன்முறையினை விரைவுப்படுத்தி எதிர்காலத்தில் இப் பணியினை நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | கோப்புக்கள் பாதுகாப்பாக களஞ்சியப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (எ) | மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் வாகன பதிவிற்காக பயன்படுத்தும் வாகன பதிவுச் சான்றிதழ் ஒரு மில்லியன் அச்சிடல் தொடர்பான பெறுகையின் போது, பெறுகை பத்திரிக்கையின் அறிமுகம், பொது ஆலோசனைகள் மற்றும் நிபந்தனைகள் போன்ற தலைப்பினுள் ஏல வழங்கல் கடிதத்தின் திகதி தொடக்கம் மூன்று வாரங்களுக்குள் | பதில் வழங்கப்படவில்லை. | உரிய கவனத்துடன் ஏல ஆவணங்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஒரு லட்ச மோட்டார் வாகனங்கள் பதிவுச் சான்றிதழ் மாதிரிகள் பெற்றுக் கொடுக்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளதுடன் அப் பெறுகை பத்திரிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள இணக்க அறிக்கையில் ஏல வழங்கல் கடிதத்தின் திகதி தொடக்கம் 30 நாட்களினுள் ஒரு லட்ச மோட்டார் வாகனங்கள் பதிவுச் சான்றிதழ் மாதிரிகள் பெற்றுக் கொடுக்கப்பட வேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ளமையினால் உரிய கவனமின்றி ஏல ஆவணங்கள் தயாரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | | |
| (ஏ) | நீண்ட காலமாக அரசிறை உரிமம் வழங்கப்பட்டுள்ள 99 மோட்டார் சைக்கிள்களுக்குரிய அடிசட்டக இலக்கங்கள் மாற்றப்பட்டு மோசடியாக இறக்குமதி செய்யப்பட்ட வேறு மோட்டார் சைக்கிள்களுக்கு இயந்திர இலக்கம் மற்றும் அடிசட்டக இலக்கம் உள்ளடக்கப்பட்டு மேற்படி பழைய பதிவு இலக்கத்திற்கு புதிய மோட்டார் வாகன பதிவுச் சான்றிதழ் வழங்கப்பட்டு மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் தரவு தளத்தில் பழைய தரவுகள் அழிக்கப்பட்டு தரவு தளத்தினை நாளதுவரையாக்கப்படுவதற்கு மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுத்திருந்தனர். | கடந்த காலப்பகுதியினுள் QR குறியீட்டின் ஊடாக எரிபொருள் பெற்றுக் கொடுக்கும் நிகழ்ச்சித் திட்டத்திற்கு அமைவாக பல தரப்பினர் அவர்களின் வாகனங்களின் விபரங்கள், வருமான அனுமதிப்பத்திரம் வழங்கும் கணினி அமைப்பினுள் நாளதுவரையாக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டதுடன் , மாவட்ட அலுவலகங்கள் ஊடாக பதிவு செய்த சைக்கிள்களும் கணக்காய்வில் காண்பிப்பதனை அவதானிப்பதுடன் இது தொடர்பான முழுமையான ஆய்வு நடாத்தப்பட்டு எதிர்காலத்தில் விடயங்களை அறிக்கையிடுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | விரைவில் உள்ளக பரிசோதனையொன்று நடாத்தப்பட்டு தாபன விதிக் கோவையின் பிரகாரம் ஒழுக்காற்கு நடவடிக்கைகள் எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஐ) | வேறு வாகன வகுப்பிற்குரிய மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள 31 வாகனங்களின் அடிசட்டக இலக்கங்கள் மற்றும் இயந்திர் இலக்கங்கள் மாற்றப்பட்டு மோசடியாக இறக்குமதி செய்யப்பட்ட மோட்டார் சைக்கள்களின் இயந்திர இலக்கம் மற்றும் அடிசட்டக இலக்கம் உள்ளடக்கப்பட்டு மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்கள தரவு தளத்தினுள் உள்ளடக்கப்பட்டிருந்த பழைய தரவுகள் அழிக்கப்படுவதற்கு மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுத்திருந்தனர். | திணைகக்கள கணினி அமைப்பு மற்றும் அரசிறை உரிமம் வழங்கும் கணினி அமைப்பு 2 உம் வித்தியாசமான அமைப்புக்களாவதுடன், அரசிறை உரிமம் வழங்கும் கணினி அமைப்பு 2009 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | | அரசிறை உரிமம் வழங்கும் உத்தியோகத்தர்களினால் அம் முறைமைக்கு வாகனத்தின் குறித்த தரவுகள் உள்ளடக்கப்பட்டு அரசிறை உரிமம் வழங்குவதற்கான வசதிகள் அம் முறைமையினுள் காணப்படுகின்றமை அவதானிக்கப்படுகின்றது. எனவே திணைக்கள தரவு தளத்தின் தரவுகள் மற்றும் அரசிறை உரிமம் வழங்கும் அமைப்பின் தரவுகள் இடையேயான வேறுபாடுகள் தொடர்பாக முழுமையான ஆய்வொன்று மேற்கொண்டு அறிக்கையிடப்பட வேண்டியமையினால் எதிர்காலத்தில் இது தொடர்பாக முழுமையான அறிக்கையொன்று பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஒ) | ஆரம்பத்தில் அரசிறை உரிமம் வழங்கப்பட்டுள்ள வேறு வாகன வகுப்பிற்குரியதாக பதிவு செய்யப்பட்டுள்ள 29 வாகனங்களுக்குரிய அடிசட்டக இலக்கம் மற்றும் இயந்திர இலக்கம் மாற்றப்பட்டு வேறு சட்ட விரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களின் அடிசட்டக இலக்கம் மற்றும் இயந்திர இலக்கம் உள்ளடக்கப்பட்டு பழைய பதிவு இலக்கத்திற்காக மோட்டார் வாகனங்கள் பதிவு செய்யும் சான்றிதழொன்று வழங்குவதற்கு மற்றும் மோட்டர் வாகன போக்குவரத்து திணைக்கள தரவு தளத்தில் மேற்படி பழைய பதிவிற்குரிய தரவுகள் அழிப்பதற்கு மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுத்திருந்தனர். | -மேற்படி- | -மேற்படி- |
| (ஓ) | ஆரம்பத்தில் பதிவு செய்யப்பட்டிருந்த 11 மோட்டார் கார்களின் அடிசட்டக இலக்கம் மற்றும் இயந்திர இலக்கம் சட்ட விரோதமாக இறக்குமதி செய்யப்பட்டிருந்த அல்லது பொருத்தப்பட்டதான காரொன்றின் அடிசட்டக இலக்கம் மற்றும் இயந்திர இலக்கம் உள்ளடக்கப்பட்டு மோட்டார் வாகனங்கள் | -மேற்படி- | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | பதிவு செய்யும் சான்றிதழொன்று வழங்குவதற்கு மற்றும் பழைய மோட்டார் வாகனத்திற்குரிய தரவுகள் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்கள தரவு தளத்திலிருந்து அழிப்பதற்கு மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுத்திருந்தனர். | | |
| (ஔ)) | நீண்ட காலமாக அரசிறை உரிமம் பெற்றுக் கொண்டிராத நிலுவை அரசிறை உரிமம் கட்டணத்துடனான பதிவு செய்யப்பட்ட 04 மோட்டார் சைக்கிள்களின் இயந்திர இலக்கம் மற்றும் அடிசட்டக இலக்கம் மாற்றப்பட்டு வேறு சட்ட விரேதமாக இறக்குமதி செய்யப்பட்ட 04 மோட்டார் சைக்கிள்களின் இயந்திர இலக்கம் மற்றும் அடிசட்டக இலக்கம் உள்ளடக்கப்பட்டு மோசடியாக 2022 ஆம் ஆண்டில் மோட்டார் வாகன பதிவுச் சான்றிதழ் வழங்கப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஃ) | இரத்து செய்யப்பட்ட வெளிநாட்டு இராஜதந்திர வாகன இலக்கங்களுக்காக பிற வாகனங்கள் பதிவுச் செய்தல். | | |
| | (i) வெளிநாட்டு இராஜதந்திரிகள் மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களுக்காக இறக்குமதி செய்யப்பட்டு அரச அனுசரனையின் கீழ் சுங்க வரியின்றி விடுவிக்கப்பட்டு மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட பின்னர் அவ்வாகனங்கள் மீண்டும் மீள்ஏற்றுமதி செய்யப்படும் சந்தர்ப்பங்களில் பதிவினை இரத்து செய்த 06 வாகனங்களுக்காக போலியாக வேறு சொகுசு வாகனங்களின் அடிசட்டக இலக்கம் மற்றும் இயந்திர இலக்கம் உள்ளடக்கப்பட்டு வேறு நபரொருவரின் பெயரில் பதிவுச் சான்றிதழ் வழங்குவதற்கு மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுத்திருந்தனர். | இது தொடர்பாக முழுமையான ஆய்வொன்று மெற்கொண்டு எதிர்காலத்தில் அறிக்கையிடுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | -மேற்படி- |
| | (ii) இலங்கை சுங்கத்தின் தரவு தளத்திற்கு அமைவாக மேற்படி (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் மோசடி தன்மையாக பதிவு செய்யப்பட்டுள்ள வாகனங்களுக்கு தொடர்புடைய செல்லுபடியாகும் சுங்க குறிப்பொன்று வழங்கப்பட்டிராமையின் காரணத்தினால் அச் சொகுசு வாகனங்கள் சட்ட விரோதமாக இறக்குமதி செய்யப்பட்டுள்ளமை மற்றும் சுங்க சட்டத்தின் பிரகாரம் செலுத்தப்பட வேண்டிய இறக்குமதி வரிகள் ஏதும் செலுத்தப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது. | -மேற்படி- | -மேற்படி- |
| | (iii) மேற்படி (i) இன் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ள வாகனங்களின் அடிசட்டக இலக்கத்திற்கு கிட்டியப பிற அடிசட்டக இலக்கங்களுடைய வாகனங்கள் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் பதிவிற்குரிய தகவல்கள் பரீட்சிக்கும் போது அவ் வாகனங்களின் உற்பத்தி ஆண்டு மற்றும் பதிவு | -மேற்படி- | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்டுள்ள திகதிகள் கருத்திற் கொள்ளும் போது அவ் வாகனங்கள் தொடர்பாக போலியான தரவுகள் உள்ளடக்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. | | |
| (iv) | இந்த மோசடிப் பதிவுகளின் திகதிகள் தொடர்பாக குறித்த தகவல்கள் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்கள (DMT) தரவு தளத்தின் ஊடாக உறுதி செய்ய முடியாமையின் காரணத்தினால் இந்த தரவுகள் இலத்திரனியல் அரசிறை உரிமம் (ERL) தரவு தளத்திற்கு மாற்றப்பட்ட திகதிகள் பரிசோதிக்கப்பட்டிருந்ததுடன் தரவுகள் மாற்றப்பட்ட திகதிகள் மற்றும் DMT தரவு தளம் நாளதுவரையாக்கப்பட்ட திகதிகள் கருத்திற் கொள்ளும் போது DMT பயனர்கள் மோசடியாக தரவு தளம் மாற்றுவதற்கு பங்களித்திருந்தமை அவதானிக்கப்பட்டது. | -மேற்படி- | -மேற்படி- |
| (v) | இவ்வாறு சட்ட விரோதமாக இந் நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்ட அல்லது இந் நாட்டில் பொருத்தப்பட்ட வாகனங்கள், மோசடி தன்மையாக மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தினுள் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் காரணத்தினால் அண்ணளவாக சொகுசு வரி மற்றும் ஏனைய அறவிடல்கள் தவிர இலங்கை சுங்கத்தினால் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 122,282,900 ஆன வரி வருமானம் மோசடி தன்மையாக பயன்படுத்தியிருந்தமை அவதானிக்கப்பட்டது. | -மேற்படி- | -மேற்படி- |
| (க) | பயன்பாட்டிற்கு எடுக்கப்படாத வெற்று இலக்கங்களுக்காக மோசடியாக மோட்டார் வாகன பதிவுச் சான்றிதழ் வழங்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் | | |
| (i) | ஆரம்ப பதிவு மேற்கொள்ளப்பட்டிராத பதிவு இலக்கம் 06 இற்காக மோசடியான முறையில் இறக்குமதி செய்யப்பட்ட அல்லது பொருத்தப்பட்ட வாகனங்களின் இயந்திர இலக்கம் மற்றும் அடிசட்டக இலக்கம் மோசடி தன்மையாக உள்ளடக்கப்பட்டு அரசிறை உரிமம் வழங்கப்படுகின்ற ERL தரவு தளத்தின் பிரகாரம் கடந்த ஆண்டுகளில் அரசிறை உரிமம் வழங்கப்பட்டிராத மற்றும் கணினி மயப்படுத்தப்பட்ட தரவு தளத்தின் பிரகாரம் கிட்டிய பதிவு இலக்கம் பதிவு செய்யப்பட்டுள்ள திகதிகள் மற்றும் கருத்திற் கொள்ளப்பட்டு செல்லுப்படியாகும் மோட்டார் வாகன பதிவுச் சான்றிதழ் வழங்கப்படுவதற்கு மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்கள உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுத்திருந்தனர். | பயன்பாட்டிற்கு எடுக்கப்படாத வெற்று இலக்கங்களுக்காக புதிய வாகனங்கள் பதிவு செய்வதற்கு கணினி அமைப்பினுள் எந்தவொரு வசதியும் இல்லாததுடன், கணக்காய்வின் ஊடாக சுட்டிக் காட்டப்படுகின்ற 253-3462 ஆம் இலக்க மோட்டார் வாகனத்தின் தரவு மோசடியாக உள்ளிடப்படவில்லை என அவதானிக்கப்படுகின்ற துடன் இது தொடர்பாக புலனாய்வொன்று புலனாய்வு பிரிவின் ஊடாக | -மேற்படி- |

| | | |
|---|---|---|
| | மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | |
| (ii) மோட்டார் வாகனமொன்று பதிவு செய்யப்பட்டிராத பழைய வெற்று இலக்கமொன்றான 253-XXXX ஆம் இலக்கத்தின் கீழ் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்கள ஹம்பந்தோட்டை உப அலுவலகம் ஊடாக 2021 ஒக்தோபர் 24 ஆம் திகதி முன்வைக்கப்பட்டிருந்த TH202129737 ஆம் இலக்க முதல் உடைமை சாட்டுதல் விண்ணப்பம் மற்றும் TH202129738 ஆம் இலக்க முழு உரிமை பதிவு விண்ணப்பங்கள் 02 பயன்படுத்தி சட்ட விரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட அல்லது பொருத்தப்பட்ட வாகனமொன்றிற்காக 2021 திசெம்பர் 03 ஆந் திகதி மோசடியாக, சட்டபூர்வமான பதிவுச் சான்றிதழொன்று வழங்கப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (iii) மோட்டார் வாகன போக்குவரத்து தரவு தளத்திற்கு மோசடியாக தகவல்கள் உள்ளிடப்பட்ட திகதி 2021 திசெம்பர் 03 ஆந் திகதி என்ற போதிலும், மோசடியான பதிவிற்குரிய பதிவு இலக்கத்திற்கு முன்னரான பதிவு இலக்கம் மற்றும் பின்னரான பதிவு இலக்கம் மோட்டார் வாக போக்குவரத்து திணைக்களம் பதிவு செய்த திகதி மற்றும் அவ் வாகனம் உற்பத்தி செய்யப்பட்ட ஆண்டிற்கு பொருந்தும் வகையில் மோசடியான பதிவு இலக்கமான 253-XXXX ஆம் இலக்கம் ஆரம்ப பதிவு திகதி 2000 ஆகஸ்ட் 17 ஆந் திகதி மற்றும் மோட்டார் வாகனத்தின் உற்பத்தி ஆண்டு 1997 ஆம் ஆண்டு என கணினி அமைப்பில் மோசடி தன்மையான தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (iv) மோட்டார் வாகன சட்டத்தின் 30(1) ஊ (III) பிரிவின் பிரகாரம் மோட்டார் வாகனமொன்று முதல் பதிவு செய்யப்பட்ட திகதி தொடக்கம் 03 நாட்களுக்குள் அரசிறை உரிமம் பெற்றுக் கொள்ளப்படுதல் வேண்டும். எனினும் இந்த மோசடியாக பதியப்பட்ட வாகனத்தின் முதல் பதிவு திகதியாக கணிகி தரவு தளத்தில் மோசடியாக உள்ளிடப்பட்ட 2000 ஆகஸ்ட் 17 ஆந் திகதி தொடக்கம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் நிலுவை அரசிறை உரிமம் கட்டணம் மற்றும் தண்டப் பணமாக ரூபா 195,865 ஆன தொகை 2021 திசெம்பர் 31 ஆந் திகதி செலுத்தப்பட்டு ஒரே தடவையில் அரசிறை உரிமம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், இந்த இலக்கத்தின் கீழ் 2022 ஆம் ஆண்டு வரையில் மோட்டார் வாகமொன்று பதிவு செய்யப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது. | -மேற்படி- | -மேற்படி- |
| (v) மோட்டார் வாகன சட்டத்தின் 14 (1) (ஈ) பிரிவின் பிரகாரம் வாகன பதிவு சான்றிதழொன்றில் ஏதும் | -மேற்படி- | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | மாற்றமொன்று மேற்கொள்வதற்கு விண்ணப்பம் சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்தின் போது செல்லுப்படியாகும் அரசிறை உரிமம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். எனினும் 2022 திசெம்பர் 03 ஆந் திகதி முழு உரிமை பதிவு செய்தல் மற்றும் உடைமை சாட்டப்படும் சந்தர்ப்பத்தில் செல்லுப்படியாகும் அரசிறை உரிமமொன்று சமர்ப்பிக்கப்படவில்லை. | | |
| (vi) | மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்கள தரவு தளத்திற்கு அமைவாக இந்த சட்ட விரோதமான பதிவினுள் முதல் உரிமையாளர் மேல் மாகாண நபரொருவராக தரவு உள்ளிடப்பட்டுள்ளதுடன் இரண்டாம் உரிமையாளர் வடமேல் மாகாணத்தின் நபரொருவராக தரவுகள் உள்ளிடப்பட்டுள்ளது. எனினும் இந்த 02 மாகாணங்களுக்கும் தொடர்பு பெறாத மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்கள ஹம்பந்தோட்டை கிளையின் உஊடாக இந்த மோசடியான பதிவு மற்றும் சாட்டுதல் மேற்கொள்ளப்பட்டுள்ளமையினால் ஹம்பந்தோட்டை பிரதேச அலுவலக உத்தியோகத்தர்கள் திட்டமிட்டு மோசடியாக இந்த சட்ட விரோதமான பதிவினை மற்றும் சாட்டுதலினை மேற்கொண்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. | -மேற்படி- | -மேற்படி- |
| (vii) | செல்லுபடியாகும் சுங்க குறிப்பொன்று இன்றி இறக்குமதி செய்யப்பட்ட அல்லது சட்ட விரோதமாக பொருத்தப்பட்ட மேற்படி இரட்டை நோக்கமுடைய வாகனத்திற்கு மோசடியாக மோட்டார் வாகன பதிவு சான்றிழ் வழங்கப்பட்டமையின் காரணத்தினால் அவ் வாகனம் தொடர்பில் அண்ணளவாக அறவிடப்பட வேண்டிய ரூபா 6,000,000 ஆன உற்பத்தி வரி வருமானம், ரூபா 181,500 ஆன சொகுசு வரி வருமானம் மற்றும் ரூபா 23,800 ஆன மோட்டார் வாகன பதிவுக் கட்டண வரமானம் உள்ளடங்கலாக மொத்தம் ரூபா 6,205,300 ஆன குத்தகை வருமானம் அறவிடப்படும் சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (viii) | 253–XXXX தொடக்கம் 253-XXXX வரை மோட்டார் வாகனங்கள் ஆரம்ப பதிவு கோப்புக்கள் பரீட்சிக்கும் போது 253-XXXX இலக்கத்தினை தவிரத்து 253-XXXX தொடக்கம் 253-XXXX வரை பதிவு இலக்கத்திற்கு இணையான துணை இலக்கங்களுடனான பதிவுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருந்தமையின் காரணத்தினால் 253-XXXX ஆம் இலக்கம் ஆரம்ப பதிவு இலக்கமொன்றாக காணப்படாமை மற்றும் சாட்டுவதற்கு முன்வைக்கப்பட்டுள்ள பதிவுச் சான்றிதழின் இலக்கம் அவ் வகைப் பதிவுச் சான்றிதழ்களின் இலக்கங்களுடன் பொருந்தாமையினாலும் அப் பதிவு சான்றிதழில் ஆனையாளரின் கையொப்பம் மற்றும் ரப்பர் | -மேற்படி- | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | முத்திரைகள் போலியானவை என அவதானிக்கப்பட்டமையின் காரணத்தினால் சாட்டுவதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள மோட்டார் வாகன பதிவுச் சான்றிதழ் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தினால் வழங்கப்பட்டு செல்லுப்படியாகும் சான்றிதழ் அன்று மோசடியாக தயாரிக்கப்பட்ட மோட்டார் வாகன பதிவு சான்றிதழ் என அவதானிக்கப்பட்டது. | | |
| (ix) | மேற்படி சாட்டுதலுக்கு சமர்ப்பிக்கப்பட்ட மோட்டார் வாகன பதிவுச் சான்றிதழின் உரிமையாளர் மற்றும் சாட்டுதல் செய்பவர் என அடையாள அட்டையின் பிரதியொன்றுடன் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள நபர் ஒரே நபராக காணப்படாமை மற்றும் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தேசிய அடையாள அட்டை ஆட்களை பதிவு செய்யும் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள செல்லுப்படியாகும் அடையாள அட்டை அன்று போலியான அடையாள அட்டையென ஆட்களை பதிவு செய்யும் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்தினால் கணக்காய்விற்கு உறுதி செய்யப்பட்டது. | -மேற்படி- | -மேற்படி- |
| (x) | சாட்டுதலுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள அரசிறை உரிமம் மாகாண மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தினால் வழங்கப்பட்ட சட்டரீதியான செல்லுப்படியாகும் அரசிறை உரிமமொன்று அல்லவென மாகாண மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தினால் கணக்காய்வின் போது உறுதி செய்யப்பட்டது. | -மேற்படி- | -மேற்படி- |
| (xi) | சாட்டுதலுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள மாதிரி படிவம் ஒரே நபரின் கையெழுத்தில் நிரப்பப்பட்டு அந் நபரினால் கைமாற்றுபவர் மற்றும் கைமாற்றம் பெறுபவர் ஆகிய இரு நபர்களினதும் கையொப்பங்களை இட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | -மேற்படி- | -மேற்படி- |
| (xii) | ஒரு நாளின் கைமாற்றத்தின் போது பெற்றுக் கொள்ளப்படுகின்ற அனைத்து ஆவணங்களும் உண்மையான பிரதிகள் என நிர்வாக உத்தியோகத்தர் அல்லது தகைமையுள்ள உத்தியோகத்தரொருவரினால் சான்றுப்படுத்திக் கொள்ள வேண்டிய போதிலும், மேற்படி போலியானதென அவதானிக்கப்படுகின்ற கைமாற்றுபவரின் அடையாள அட்டையின் கிரதி, மோட்டார் வாகன பதிவுச் சான்றிதழின் பிரதி மற்றும் அரசிறை உரிமத்தின் பிரதி உண்மையான பிரதிகள் என நிர்வாக உத்தியோகத்தரொருவரின் அல்லது தகைமைகள் உள்ள நபரொருவரினால் சான்றுப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (xiii) | GC-XXXX அம் இலக்க பதிவு இலக்கமுடைய வாகனமும், மேற்படி 253-XXXX இல் குறிப்பிடப்படுள்ள கைமாற்றுபவரிடமிருந்து அங்கு குறிப்பிடப்பட்டுள்ள கைமாற்றம் பெறுபவருக்கே உடைமை மாற்றப்பட்டுள்ளது. எனவே இந்த கைமாற்றமும் சட்ட ரீதியான ஆவணங்களுடனான கைமாற்றம் அல்லவென அவதானிக்கப்படுகின்றதுடன், இந்த கைமாற்றத்திற்குரிய கைமாற்றல் கோப்புக்கள், கோப்புக்கள் களஞ்சியத்திலிருந்து காணாமல் போயிருந்தமை கணக்காய்வின் போது மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது உறுதி செய்யப்பட்டது. | -மேற்படி- | -மேற்படி- |
| (ங) | வாகனங்கள் சட்ட விரோதமாக பதிவு செய்யப்படல் மற்றும் மோட்டார் வாகனங்கள் பதிவிற்காக போலியான மற்றும் மோசடியான ஆவணங்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்திற்கு பல ஆண்டுகளாக கணக்காய்வு அறிக்கை முன்வைக்கப்பட்டுள்ளதுடன் 2022 ஆம் ஆண்டில் 4 சந்தர்ப்பங்களின் போது மோசடியாக பதிவு செய்தல் மற்றும் போதியான ஆவணங்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக கணக்காய்வு அவதானிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. எனினும் அவ் வாகனங்களின் கைமாற்றம் தொடர்பில் மோசடியான மற்றும் போலியான ஆவணங்களை சமர்ப்பித்த தரப்பினர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள மோசடிகள் நிகழ்ந்துள்ள வான பதிவுகள் இரத்து செய்யப்பட்டு போலியான தகவல்கள் சமர்ப்பித்த அவ் வாகனங்களின் பதிவு உரிமையாளர்களுக்கு எதிராக குற்றவியல் சட்ட விதிகளின் பிரகாரம் சட்ட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் வான பதிவு மற்றும் அதற்குரிய விடயங்களுக்காக கடமைகளை நிறைவேற்றுவதற்கு தெவைப்படுகின்ற கணினி தரவுகள் உள்ளிடுவதற்கு அனுமதியுள்ள பயனர்களுக்கு கணினி கடவுச் சொற்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்ததுடன் திணைக்களத்திலிருந்து வேறு அலுவலகங்களுக்கு இடமாற்றம் பெற்று சென்ற மற்றும் ஓய்வுப் பெற்று சென்ற உத்தியோகத்தர்களுக்கு கொடுக்கப்பட்டிருந்த கடவுச் சொற்களை போன்று, திணைக்களத்தில் பணி புரியும் எனினும் கடமை பணித்தலின் பிரகாரம் பயன்பாடற்ற கடவுச் சொற்கள் தொடர்ந்தும் செயற்பாட்டுடன் | மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்கள கணினி அமைப்பிற்கு தேவைப்படுகின்ற பயனர் பெயர்கள் மற்றும் கடவுச் சொற்கள் உரிய முறைமையொன்றின் கீழ் பெற்றுக் கொடுக்கப்படுகின்றது. சேவை வழங்கல் பிரிவு மற்றும் நிறைவேற்றப்படுகின்ற பணிகளுக்கு அமைவாக குறித்த உத்தியோகத்தர்களுக்கு பயனர் பெயர்கள் பெற்றுக் | செயலில் உள்ள பயனர் கடவுச் சொற்களை இனங்கண்டு உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை வலுப்படுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காணப்படுகின்றமையினால் அக் கடவுச் சொற்கள் பயன்பாடு மோசடி மற்றும் ஊழல் செய்வதற்கு சந்தர்ப்பம் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. | கொடுப்பதுடன், குறித்த உத்தியோகத்தர் குறித்த பிரிவில் இருந்து விலகின்றமை அறிக்கையிடப்பட்டவுடனே உத்தியோகத்தருக்கு உரிய பயனர் பெயர் இரத்து செய்யப்படும். பயனர் பெயர் பெற்றுக் கொடுத்தலானது பிரிவுத் தலைவர்களின் எழுத்து மூல கோரிக்கைகளின் அடிப்படையில் மட்டும் மெற்கொள்ளப்படுகின்றது. | |
| (ஆ) | அரசிறை உரிமம் 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் பெற்றுக் கொள்ளாத மொட்டார் வாகனங்கள் மீள அரசிறை உரிமங்களை கோரும் போது பிரதி ஆனையாளர் புலனாய்விடமிருந்து பரிந்துரை பெற்றுக் கொள்ளப்பட வேண்டுமென்று நிபந்தனை வகுக்கப்பட்டுள்ள போதிலும், அத் தேவைப்பாட்டினை பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் அரசிறை உரிமம் வழங்கப்படுமென உறுதி செய்துக் கொள்வதற்கு உரிய வேலைத்திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | பிரதி ஆனையாளர் புலனாய்வு பரிந்துரை பெற்றுக் கொள்ளப்பட்ட பின்னர் காலங்கடந்த அரசிறை உரிமங்கள் மீள வழங்கப்படுவதற்கு உறுதி செய்யப்படுவதற்கு வேலைத் திட்டமொன்று அறிமுகப்படுத்தப்படல் வேண்டும். |
| (இ) | மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் ஊடாக இரத்து செய்யப்பட்ட அல்லது செயவிழக்க செய்யப்பட்ட வாகன பதிவு இலக்கங்கள் மீண்டும் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத வண்ணம் கணினிமயபபடுத்தப்பட்ட தகவல்கள் முறைமையின் ஊடாக முடக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் ஊடாக இரத்து செய்யப்பட்ட அல்லது செயவிழக்க செய்யப்பட்ட வாகன பதிவு இலக்கங்கள் மீண்டும் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாது. | இரத்து செய்யப்பட்ட வாகன இலக்கங்கள் மீண்டும் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத வண்ணம் கணினி முறையினை முடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் நிறைவேற்று உத்தியோகத்தர்களான ஆனையாளர்களுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள கடவுச் சொல் பயன்படுத்தி முன்னர் பதியப்பட்ட வாகனமொன்றின் அடிசட்டக இலக்கம் உள்ளடங்கலாக தரவு தளத்தினுள்ள எவையேனும் தகவல் மாற்றுவதற்கு அல்லது அழிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதுடன் அவ்வாறு மாற்றப்படுகின்ற கடந்த கால தரவுகள் ஏதும் மீண்டும் பெற்றுக் கொள்ள முடியாத வண்ணம் முழுமையாக அழிந்து செல்வதற்கு வசதியளிக்கப்பட்டிருந்தது. | நிறைவேற்று உத்தியோகத்தர்களான ஆனையாளர்களுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள பயனர் பெயர் பயன்படுத்தி முன்னர் பதியப்பட்ட வாகனமொன்றில் மாற்றப்படுகின்ற எவையேனும் தகவல் குறிப்ப பத்தகமாக பெற்றுக் கொள்வதற்கு முடிவதுடன், அதன் பொது ஆரம்ப தரவு மற்றும் புதிய தரவு இரண்டினையும் அவதானிக்க வசதியளிக்கப்பட்டுள்ளது. | கடந்த கார தரவுகள் ஏதும் அழியாத பிரகாரம் மற்றும் (பழைய மோட்டார் வாகனங்களின் பதிவினை மாற்றுதல் தொடர்பாக) அனைத்து தகவல்களும் மீள பெற்றுக் கொள்ளக் கூடிய வகையில் கணினி அமைப்பினை மேம்படுத்தல் வேண்டும். |